நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மணப்பாறை.

முன்னிலை: திரு. இரா. அசோக்குமார் **B.Com, B.L .,**

நீதித்துறை நடுவர், மணப்பாறை,

2026 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01-ம் நாள் சனிக்கிழமை

ஆண்டுபட்டிகை வழக்கு எண்.126/2023

(CNR NO. TNTP10-004500-2023)

**சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021 ம் தேதியிட்ட R.O.C.No.814/2020/RG/F1 ன் படி வழக்கின் சுருக்கம்**

.....

| | |
|---|---|
| குற்றமுறையீடுபவர் | தமிழ்நாடு அரசு,<br>அதற்காக காவல் உதவி ஆய்வாளர்<br>துவரங்குறிச்சி காவல் நிலையம்,<br>குற்ற எண்.225/2022 |
| குற்றஞ்சாட்டப்பட்ட எதிரிகள்: | 1. மணிகண்டன்<br>த/பெ. முருகன்,<br>2. ஜெயபிரகாஷ்,<br>த/பெ. முருகன்<br>3. பாண்டி,<br>த/பெ. முருகன் |
| குற்றப்பிரிவு | U/s. 294(b), 323, 326, 506(1) IPC |
| வனையப்பட்டது | A1, A3- U/s. 294(b), 323 IPC<br>A2- U/s. 294(b), 323, 326, 506(1) IPC |
| தீர்மானம் | **முடிவாக 1, 3 எதிரிகளின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டானது சட்டப்பிரிவுகள் 294(b), 323 IPC-ன்கீழான குற்றச்சாட்டுகளும், 2-வது எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டானது சட்டப்பிரிவுகள் 294(b), 323, 326, 506(1) IPCன் கீழான குற்றச்சாட்டுகளும் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து** |

| | |
|---|---|
| | **சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து அவர்கள் குற்றவாளிகள் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 248(i)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.** |

குற்றம் சாட்டப்பட்டவர்கள் விபரம்

| பெயர் | த.பெ. / க.பெ. | மதம் | தொழில் | குடியிருப்பு | வயது |
|---|---|---|---|---|---|
| 1. மணிகண்டன் | முருகன் | இந்து | கூலி | சேதுப்பட்டி, முத்தாழ்வார்பட்டி அஞ்சல், மருங்காபுரி வட்டம், திருச்சி மாவட்டம். | 24/ 2022 |
| 2. ஜெயபிரகாஷ், | முருகன் | இந்து | கூலி | சேதுப்பட்டி, முத்தாழ்வார்பட்டி அஞ்சல், மருங்காபுரி வட்டம், திருச்சி மாவட்டம். | 20/ 2022 |
| 3. பாண்டி, | முருகன் | இந்து | கூலி | சேதுப்பட்டி, முத்தாழ்வார்பட்டி அஞ்சல், மருங்காபுரி வட்டம், திருச்சி மாவட்டம். | 22/ 2022 |

தேதி விவரங்கள்:–

| | | |
|---|---|---|
| குற்ற நிகழ்வு நாள் | : | 25.12.2022 |
| புகார் கொடுத்த நாள் | : | 27.12.2022 |
| எதிரிகளை கைது செய்த நாள் | : | – |
| பிணை விடுவிப்பு | : | A1–A3 (The Hon'ble Principal District and Sessions Jude, Tiruchirappalli Bail order in Cr.M.P.No.1440/2023 Dated 31.03.2023) Released on bail – 13.04.2023. |
| Committal | : | N.A |
| விசாரணை துவக்கம் | : | 09.03.2026 |

| | | |
|---|---|---|
| விசாரணை முடிவு | : | 13.07.2026 |
| எதிரி காவலில் இருந்த நாட்கள் | : | – |
| இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி | : | 01.04.2023 |
| Date of Questioning | : | 03.03.2026 |
| இடையீட்டு மனுக்கள் மற்றும் அதன் முடிவு | : | –– |
| சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்த தேதிகள் | : | PW's Chief Cross<br>PW1 09.03.2026<br>PW2 23.06.2026 23.06.2026 |
| சட்டப்பிரிவு 313(1)(b) கு.வி.மு.ச – விசாரணை தேதி | : | 01.07.2026 |
| தலைமறைவு எதிரிகளின் விபரம் அவர்கள் கைது செய்த விவரம் ஆஜர்படுத்தப்பட்ட விபரம் | : | Nil |
| மேலவை நீதிமன்றங்களால் தடையாணை வழங்கப்பட்ட விவரம் அதன் முடிவு | : | Nil |
| கால தாமதத்திற்கான காரணம் | : | -- |

இவ்வழக்கானது 03.10.2023–ம் தேதியில் கோப்புக்கு எடுக்கப்பட்டு என் முன்பாக இறுதியாக 13.07.2026–ம் தேதி விசாரணைக்கு வரப்பெற்று, அரசு தரப்பில் **திரு. ஆனந்தகுமார் உதவி வழக்குரைஞர் நிலை 2 அவர்களும்**, எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் **திரு. K.P.T. அழகர்சாமி** அவர்களும், ஆஜராகி செய்த வாதுரைகளை கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் ...

<u>**தீர்ப்புரை**</u>

இவ்வழக்கானது புகார்தாரரால் இந்திய குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 173–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் படி எழுந்த வழக்காகும்.

**<u>2. குற்ற முறையீட்டின் சுருக்கம்</u>:–**

கடந்த 24.12.2022–ம் தேதி மாலை 06.00 மணியளவில் வாதி முருகனின் முதல் மனைவி செவத்தமணியின் மகனான 1–வது எதிரி மதுபோதையில் வீட்டில் இருந்த துணிகளை தீ பற்ற வைத்து எரித்துவிட்டான் என்றும், என்ன சொன்னாலும் கேட்க மாட்டிக்கிறான் என்றும் செவத்தமணி வாதிக்கு போனில் தகவல் சொல்லியுள்ளார். அதனால் வாதி சம்பவ நாளான 25.12.2022–ம் தேதி வேலை முடித்துவிட்டு தனது வீட்டிற்கு சென்று 1–வது எதிரியை பார்த்தபோது வீட்டில் இல்லாததால் வாதி தேடி சென்றதில் மதியம் 02.00 மணியளவில் சேத்துப்பட்டி மந்தையம்மாள் கோவில் மந்தையில் உள்ள அரசமரத்தடியில் 1–வது எதிரி உட்கார்ந்திருந்துள்ளார். வாதி 1–வது எதிரியைப்பார்த்து ஏன் இவ்வாறு செய்கிறார் என கண்டித்துள்ளார். அப்போது செவத்தமணியின் இரண்டாவது மகனான 3–வது எதிரி பாண்டி மற்றும் இளஞ்சியத்தின் மகனான 2–வது எதிரி ஜெயப்பிரகாஷ் ஆகிய இருவருக்கும் போன் மூலம் தகவல் சொல்லி இரண்டு பேரையும் வரவைத்து மது போதையில் இருந்த மூன்று போரும் வாதியை மாறிமாறி கையால் தாக்கி சொற்ப காயத்தையும், வாதி தடுக்க முயற்சித்தபோது 1–வது எதிரி ஏன்டா கொம்மாள ஓக்க உனக்கெல்லாம் இரண்டு பொண்டாட்டியாடா என திட்டிக்கொண்டே அங்கிருந்த குச்சியால் அடித்தும், பிறகு 3–வது எதிரி பாண்டியும்

தேவிடியா புண்டா மகனே என திட்டிக்கொண்டே குச்சியை எடுத்து வாதியின் தலையில் அடித்தும், வாதிக்கு தலையின் வலது பக்கம் சொற்ப காயத்தை ஏற்படத்தியும், அப்போது 2–வது எதிரி இந்த தேவிடியா மகன நான் கொல்லாமல் விடமாட்டேன் என கொலை மிரட்டல் விடுத்தும் வாதியின் கண்ணில் தனது கையால் அடித்து கீழே தள்ளிவிட்டும், அருகில் கிடந்த ஆலோபிளாக் கல்லை எடுத்து வாதியின் இடது காலில் அடித்து கொடுங்காயத்தை ஏற்படுத்தியுள்ளார். எனவே, 1–வது எதிரியின் குற்றச்செய்கையானது சட்டப்பிரிவு 294(b), 323 IPC ன்படியும், A2–ன் குற்றச்செய்கையானது சட்டப்பிரிவு 294(b), 323, 326, 506(i) IPC ன்படியும், 3–வது எதிரியின் குற்றச்செய்கையானது சட்டப்பிரிவு 294(b), 323 IPC ன்படியும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்ததாக துவரங்குறிச்சி காவல் நிலைய உதவி ஆய்வாளர் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**3. வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிகளிடம் வினவல்:**

குற்றப்பத்திரிக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் எதிரிகளுக்கு வழக்காவணங்களின் நகல் U/S.**230 Bharatiya Nagarik Suraksha Sanhita 2023**(கு.வி.மு.ச பிரிவு 207)–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால அவகாசத்திற்கு பின்பு, வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து, எதிரிகளுக்கு எதிராக பிரிவு **263(1) Bharatiya Nagarik Suraksha Sanhita 2023–ன் (**கு.வி.மு.ச. பிரிவு 240(1))–ன் படி 1–வது எதிரியின் குற்றச்செய்கையானது சட்டப்பிரிவு 294(b), 323 IPC ன்படியும், A2–ன் குற்றச்செய்கையானது சட்டப்பிரிவு 294(b), 323, 326, 506(i) IPC ன்படியும், 3–வது எதிரியின் குற்றச்செய்கையானது சட்டப்பிரிவு 294(b), 323 IPC ன்படியும் குற்றச்சாட்டு வனையப்பட்டு, பிரிவு263(1) Bharatiya Nagarik Suraksha Sanhita 2023 (கு.வி.மு.ச.240(2)) பிரிவின் கீழ் எதிரிகளிடம் விளக்கி கூறி வினவியபோது, எதிரிகள் பொய் வழக்கு என மறுத்து கூறியதால் அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4. விசாரணை:–**

அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளது. அ.சா.ஆ.1 மற்றும் அ.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் எவ்வித சாட்சிய, சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**5. அரசு தரப்பு சாட்சியத்தின் சுருக்கம் :–**

(5.1) அ.சா.1. திரு முருகன் தனது முதல் விசாரணை சாட்சியத்தில் ஆஜர் எதிரிகள் எனது மகன்கள் என்றும், நான் கடந்த இரண்டு வருடத்திற்கு முன்பு மாலை 6 மணியளவில் எனது வீட்டில் துணிகளில் தீப்பற்றிக்கொண்டது என்றும், அது சம்பந்தமாக மறுநாள் மந்தையம்மாள் கோவில் மந்தையில் உள்ள அரசு மரத்தடியில் நான் பேசிக்கொண்டிருந்தபோது சில நபர்கள் கூடி பிரச்சனை நடந்தது என்றும், அதில் நான் என்னவென்று பார்க்கச் சென்றபோது தடுமாறி கீழே விழுந்து விட்டேன் என்றும், அதில் எனது இடது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது என்றும், அதனால் மணப்பாறை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன் என்றும், அங்கு வந்த போலீசார் எழுதாத வெள்ளை தாளில் கையொப்பம் பெற்றுச்சென்றார்கள் என்றும், தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் என்றும்தான் என்றும், அதில் என்ன எழுதி இருந்தது பற்றி எனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.2) அ.சா.2. திரு. ரெங்கசாமி (காவல் உதவி ஆய்வாளர்) தனது சாட்சியத்தில் தற்போது துவரங்குறிச்சி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், மேற்படி காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த திரு. சரவணன் என்பவருடன் பணிபுரிந்த வகையில் தெரியும், அவரது கையெழுத்து மற்றும் எழுத்து நடை எனக்கு நன்கு பரீட்சையும் அவர் பணி மாறுதல் சென்று விட்டார் என்றும், இவ்வழக்கில் நீதியின் நலன் கருதி காலம் விரயத்தை தவிர்க்கும் பொருட்டு அவருக்காக கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், கடந்த

27.12.2022 அன்று பகல் 02.00 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் சரவணன் நிலையை அலுவலில் இருந்தபோது மணப்பாறை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த முருகன் என்பவரிடம் பெறப்பட்ட புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் துவரங்குறிச்சி காவல் நிலையத்தில் நிலைய குற்ற எண் 225/2022 சட்டப்பிரிவுகள் 294(b),323,324,506(1) இ.த.ச. பிரிவின் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ளார் என்றும், தொடர்ந்து அவர் இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் சம்பவ இடம் சென்று பார்வையிட்டு பட்டியல் சாட்சிகள் 1 முதல் 4 வரையிலான சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், தொடர்ந்து சம்பவ இடத்தில் சாட்சிகள் தவமணி, ரஞ்சிதா ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி பார்வை மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று அவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், சாட்சிகள் மற்றும் புலன் விசாரணை அடிப்படையின் அடிப்படையில் எதிரிகள் மீதான குற்றம் உண்மை என தெரிய வந்ததால் எதிரிகளை கைது செய்ய தேடியபோது எதிரிகளை கைது செய்து தக்க பிணையில் விடுவித்துள்ளார் என்றும், தொடர்ந்து இவ்வழக்கில் காயமடைந்த முருகன் என்பவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என காயச் சான்று வழங்கிய மருத்துவர் சையது பக்கர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயம் அடைந்தவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என வழங்கிய விபத்து பதிவேட்டுடன்கூடிய காயச் சான்றிதழ் பெற்றுள்ளார் என்றும், காயச்சான்றிதழ்படி இவ்வழக்கின் சட்ட பிரிவுகளை 294(b),323,324,506(1) இ.த.ச. பிரிவின் கீழ் இருந்து சட்டப்பிரிவுகள் 294(b), 323, 326, 506(1) இ.த.ச. பிரிவின் கீழ் சட்ட மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், இவ்வாறாக புலன் விசாரணை முடித்து எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**6. குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 313 (1) (b) பிரிவின் படியான நடவடிக்கை:**

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிகளுக்கு பாதகமான தோன்றிய விஷயங்கள் குறித்து குற்ற விசாரணை முறை சட்டம் பிரிவு 313 (1) (b) பிரிவின்படி கேள்விகள் கேட்க எதிரிகள் தரப்பில் சாட்சியங்களை மறுத்து பொய் சாட்சி என்றும், இந்த வழக்கு பற்றி வேறு ஏதாவது கூற வேண்டுமா என்று வினவியபோது பொய் வழக்கு என்றும், எதிரி பக்கம் விசாரிக்க சாட்சிகள் எவரும் உண்டா என்று வினவியபோது சாட்சிகள் இல்லை என்றும் கூறினார். பின்பு எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் எதிரிகள் தரப்பில் சாட்சிகள் விசாரணை இல்லை என்று குறிப்புரை செய்ததன் பெயரில் எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**7. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை:–**

**இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது எதிரிகளின் மீது சட்டப்பிரிவு U/s.294(b), 323, 326, 506(1) IPC–ன் கீழ் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

**8. தீர்வு:**

(8.1). பிரச்சனைக்கான தீர்வு மற்றும் காரணங்கள் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள் இரண்டுமே ஒன்றுக்கொன்று பிணைந்து இருப்பதால் இரு பிரச்சனைகளும் ஒன்றாக தீர்வு காணப்படுகிறது.

(8.2) இந்திய சாட்சி சட்டம் பிரிவு 101 படி எதிரிகளுக்கு எதிரான இவ்வழக்கினை நிரூபிக்கும் பொறுப்பு அரசு தரப்பில் சார்ந்ததாகும். அரசு தரப்பு வழக்கினை நிரூபிக்க அரசு தரப்பில் அ.சா.1. மற்றும் அ.சா.2. வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டார்கள். தற்போது தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள் யாதெனில் அரசு தரப்பில் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் **294(b), 323, 326, 506(2) IPC–ன்** கீழான குற்றங்களின்

உட்கூறுகள் தகுந்த சாட்சிகளின் சாட்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதா இல்லையா மற்றும் எதிரிகளின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் எல்லாவித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு அரசு தரப்பினால் நிரூபிக்கப்பட்டுள்ளதா இல்லையா என்பதே ஆகும்.

(8.3) அ.சா.1.வழக்கில் புகார்தாரர் ஆவார். அவரின் சாட்சியத்தினை முழுமையாக பரிசீலனை செய்து அவர் அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலுமாக பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார். அவர் இவ்வழக்கின் ஆணிவேரான புகார் வாக்குமூலத்தையே மறுத்து சாட்சியம் அளித்துள்ளார். அவர் வாக்குமூலம் ஏதும் அளிக்கவில்லை என்றும் எதிரியை தெரியுமா என்றால் ஞாபகமில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். எனவே மேற்படி அவர்கள் சாட்சியமானது அரசு தரப்பு சான்று புகார் வாக்குமூலத்தின் நம்பக தன்மையை குறித்து நியாயமான சந்தேகங்களை எழுப்புகின்றது.

(8.4) மேலும் அ.சா.1. எதிரிகள் குறித்தும் அவர்களின் குற்ற செய்கை குறித்தும் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294(b),323, 326, 506(1) **IPC-ன்** கீழான எந்த ஒரு உட்கூறு குறித்தும் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. சுமார் 2 வருடத்திற்கு முன்பு கடந்த இரண்டு வருடத்திற்கு முன்பு மாலை 6 மணி அளவில் எனது வீட்டில் துணிகளில் தீப்பற்றிக் கொண்டது என்றும், அது சம்பந்தமாக மறுநாள் மந்தை அம்மாள் கோவிலில் மந்தையில் உள்ள அரசு மரத்தடியில் நான் பேசிக் கொண்டிருந்தபோது சில நபர்கள் கூடி பிரச்சனை நடந்தது. அதில் நான் என்னவென்று பார்க்கச் சென்றபோது தடுமாறி கீழே விழுந்து விட்டேன். அதில் எனது இடது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது என்றும், அதனால் மணப்பாறை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். போலீசார் விசாரிக்க வந்த போது எழுதாத வெள்ளை தாளில் கையொப்பம் பெற்றுச்சென்றார்கள் என்றும், தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் என்றும், தான் அதில் என்ன எழுதி இருந்தது பற்றி எனக்கு தெரியாது என்றும், போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் பிறழ் சாட்சியாக சாட்சியம்

அளித்துள்ளார். எனவே அவரது சாட்சியமானது எதிரிகளுக்கு எதிரான அரசு தரப்பு வழக்கினை நிலை நாட்டு வகையில் அமையவில்லை.

(8.5) அ.சா.1. நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்த எதிரிகளை அடையாளம் காணவில்லை, அவர்கள் எதிரிகளின் குற்றமுறு செய்கை குறித்தும், அரசு தரப்பில் சொல்லப்படுகின்ற வழக்கு சம்பவம் குறித்தும் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. எனவே அவர்களது சாட்சியும் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் அமையவில்லை. போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்று சொல்லி பிறழ் சாட்சியாக உள்ளது தெரிய வருகிறது. நம்பகத்தன்மை குறித்து நியாயமான சந்தேகங்களை எழுப்புகின்றது.

(8.6) அரசு தரப்பில் இறுதியாக திரு.ரெங்கசாமி (காவல் உதவி ஆய்வாளர்) தனது சாட்சியத்தில் கடந்த கடந்த 27.12.2022 அன்று பகல் 12 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் சரவணன் நிலையை அலுவலில் இருந்தபோது மணப்பாறை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த முருகன் என்பவரிடம் பெறப்பட்ட புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் துவரங்குறிச்சி காவல் நிலையத்தில் நிலைய குற்ற எண் 225/2022 சட்டப்பிரிவுகள் 294(b), 323, 324, 506(1) இ.த.ச. பிரிவின் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ளார் என்றும்,

(8.7) தொடர்ந்து அவர் இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் சம்பவ இடம் சென்று பார்வையிட்டு பட்டியல் சாட்சிகள் 1 முதல் 4 வரையிலான சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், தொடர்ந்து சம்பவ இடத்தில் சாட்சிகள் தவமணி, ரஞ்சிதா ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி பார்வை மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று அவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், சாட்சிகள் மற்றும் புலன் விசாரணை அடிப்படையின் அடிப்படையில் எதிரிகள் மீதான குற்றம் உண்மை என தெரிய

வந்ததால் எதிரிகளை கைது செய்ய தேடியபோது எதிரிகளை கைது செய்து தக்க பிணையில் விடுவித்துள்ளார் என்றும், தொடர்ந்து இவ்வழக்கில் காயமடைந்த முருகன் என்பவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என காயச் சான்று வழங்கிய மருத்துவர் சையது பக்கர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயம் அடைந்தவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என வழங்கிய விபத்து பதிவேட்டுடன்கூடிய காயச் சான்றிதழ் பெற்றுள்ளார் என்றும், அவர் தான் மேற்கொண்ட புலன் விசாரணை குறித்தும், எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் மேற்படி அவரது சாட்சியத்தினை ஒத்துரைக்கும் வகையில் அரசு தரப்பில் சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்கவில்லை. இந்த வழக்கின் புகார்தாரரே புகார் வாக்குமூலத்தை மறுத்து சாட்சியமளித்து அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலுமாக பிறழ் சாட்சியாகிவிட்டார். விசாரிக்கப்பட்ட கண்ணுற்ற சாட்சிகளும் அரசு தரப்பு வழக்கிற்கு பிறழ்சாட்சியாகி விட்டார்கள். அவர்கள் அனைவரும் எதிரிகளுக்கும், அரசு தரப்பு வழக்கிற்கும் இடையே உள்ள தொடர்பு குறித்து சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை .

(8.8) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த சரஸ்வதி மற்றும் பல எதிர் அரசு **2002 Crl LJ 1420** என்ற தீர்ப்பின் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 294(b)ன் கீழான குற்றத்தின் உட்கூறுகள் ஆபாச சொற்களை ஒரு நபர் பொது இடத்தில் மற்றவருக்கு எரிச்சல் ஊட்டும் வகையில் மொழிதல் வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. மேலும், அந்த தீர்ப்பில் இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு 323 ன் கீழான குற்றத்தின் உட்புரிகளின் ஒருவரின் உடலுக்கு அல்லது பெயருக்கு பீதி விளைவிக்கும் உட்கருத்துடன் மிரட்டல் விடுத்து அத்தகைய மிரட்டல் நிறைவேற்றப்படுவதை தவிர்க்கும் பொருட்டு ஒருவர் சட்டப்படி செய்ய கட்டுப்பட்டிறாத செய்கை செய்வதையும் அல்லது சட்டப்படி அவர் செய்ய உரிமை பெற்றிருக்கிற செய்கை எதனையும் செய்யாது விடுவித்தல் வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

(8.9) ஆனால் தற்போதைய அரசு தரப்பு வழக்கில் மேற்படி தீர்ப்பில் சொல்லப்பட்டுள்ள சட்ட பிரிவுகள் 294(b) மற்றும் 506(ii) வின் கீழான எந்த ஒரு உட்கூரும் நிலை நாட்டப்படவில்லை. மேலும் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294(b), 323, 326, 506(1) IPC–ன் கீழான எந்த ஒரு உட்கூறுகள் அரசு தரப்பு சாட்சிகள் மூலம் நிலைநாட்டப்படவில்லை. எனவே, எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை தகுந்த சாட்சிகளின் சாட்சிகள், சான்றாவணங்கள் மூலம் நிலைநாட்ட அரசு தரப்பு தவறிவிட்டது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**முடிவாக 1–வது எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டானது சட்டப்பிரிவுகள் 294(b), 323 IPC–ன்கீழான குற்றச்சாட்டுகளும், 2–வது எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டானது சட்டப்பிரிவுகள் 294(b), 323, 326, 506(1) IPC ன் கீழான குற்றச்சாட்டுகளும் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து அவர்கள் குற்றவாளிகள் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 248(i)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

9. வழக்கில் வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றப்படவில்லை. எதிரிகள் எழுதிக் கொடுத்துள்ள பிணைய பத்திரமும் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2026–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01–ம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

ASHOKUMAR R

Digitally signed by ASHOKUMAR R
Date: 2026.08.01 17:13:42 +0530

**நீதித்துறை நடுவர்,**

**மணப்பாறை.**

**இணைப்பு:**

**அரசு தரப்பு சாட்சிகள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.1. | : | திரு முருகன் |
| அ.சா.2. | : | திரு. ரெங்கசாமி (காவல் உதவி ஆய்வாளர்) |

**அரசுதரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1. | : | புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் (திரு. முருகன்) |
| அ.சா.ஆ.2 | : | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.3 | : | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | : | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | : | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.6 | : | முருகன் என்பவருக்கு வழங்கிய விபத்துப்பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.7 | : | மணிகண்டன் என்பவருக்கு வழங்கிய விபத்துப்பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.8 | : | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

**அரசு தரப்பில் சான்று பொருட்கள்**: இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை

ASHOKUMAR R

Digitally signed by ASHOKUMAR R
Date: 2026.08.01 17:13:33 +0530

நீதித்துறை நடுவர்
மணப்பாறை.

**பின்குறிப்பு:-**

1) வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
2) எந்த சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் விசாரிக்கப்படவில்லை.